ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1941/38 - 2015 නොවැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2015.11.20

1941/38 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: பிய/3/1/1/262/கொனுவ.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மேல் மாகாணத்தில் கம்பஹ மாவட்டத்தின், பியகம் பிரதேச செயலாளர் பிரிவில், இல. 269பீ இஹல பியன்வில மத்திம கிராம உத்தியோகத்தர் பிரிவில், அதிகாரி பத்துவ சிறுபிரிவில், இஹல பியன்வில கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கம். 3963 இல் குறிப்பிடப்பட்ட 0.0436 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரம் பின்வருமாறு:-

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: கொன்கஹவத்தர; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோரு வோர்: ஜே. எம்.டீ. சிறிபால, இல. 220/ 1 1, ஜய மாவத்தை, இஹல பியன்வில, கடவத்தை; விஸ்தீரணம்: 0.0436 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வரகாப்பொல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகள் பற்றிய விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படி இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. எச். வீ. புஷ்பமாலா,
பிரதேச செயலாளர்,
பியகம.

பிரதேச செயலகம்,
பியகம,
2015, நவெம்பர் 16.

12 - 240

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.